1967 ஜூலை 10]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : திருச்சிராப்பள்ளி தண்டல் நாயகம் அவர்களிடமிருந்தும், கனம் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களிடமிருந்தும் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இது வரையில் அந்த அறிக்கை கிடைக்கவில்லை. ஆகவே, அறிக்கை உடனடியாகக் கிடைக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

DR. H. V. HANDE : Sir, with regard to the Tirunelveli municipality, two years ago a similar question was put by me with regard to the supersession of that municipality and the answer then given contained an entirely different set of reasons. Now the Hon. Minister has stated in his answer to the main question that one of the reasons for the supersession of that municipality is the unveiling of the portrait of the present Chief Minister. There is a clearcut discrepancy in the answers given to the same question. I wish to know whether this Government have fixed responsibility on the particular officer concerned who gave wrong information two years ago?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்ட நகராட்சியை, மாவட்ட நகராட்சி சட்டத்தின்படி அதைக் கலைத்தபோது அதற்குப் பல காரணங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அந்தக் காரணங்கள்பற்றி உயர்நீதி மன்றம் முடிவு சொல்லியிருக்கிறது. இந்தக் காரணம், குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. நகராட்சியைக் கலைத்ததைப் பற்றி தனித்தனிக் காரணங்கள் ஒவ்வொன்றும் கொடுத்தார்கள். இதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

### ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி, சாத்தான்குளம்

* 239 வினா.—திரு. டி. மார்டின் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சாத்தான்குளத்தில் பெண்கள் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to reconsider his decision in view of the fact that there are a large number of girls, daughters of Ceylon repatriates, waiting for more than four years for getting admission in training schools after having completed S.S.L.C.?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாநிலத்திலே ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் 117-ம் நான்-பேசிக் ஸ்கூல்—மற்ற பயிற்சிப்பள்ளிகள்

20-ம் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆதாரப் பயிற்சிப்பள்ளிகள் 15ம், மற்ற பயிற்சிப் பள்ளி ஒன்றும் இருக்கின்றன. மேலும், நெல்லை மாவட்டத்தில் பெண்களுக்கான 8 பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. தவிர, ஒவ்வொரு ஆண்டும், பயிற்சி பெற்று வருகின்ற ஆசிரியர்களுக்கு இடம் தேடிக் கொடுக்கின்ற பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த வகையிலே, கல்வித் துறை இயக்குனர் அவர்கள், இந்தப் பயிற்சிப் பள்ளிகளின் மூலமாகத் தேவையான ஆசிரியர்களைப் பெற முடியும், எனவே, இப்போதுள்ள பயிற்சிப் பள்ளிகளே போதுமானவை என விளக்கியுள்ளார். மேலும் பயிற்சிப் பள்ளிகளை அதிகமாக்குவதன் மூலம், வெளிவருகின்ற ஆசிரியர்களுக்கு இடமளிக்க முடியாத நிலையில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்ற காரணத்தாலும், தற்போது வேறு எந்தப் பயிற்சிப் பள்ளியும் துவக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவில்லை. பின்னர் தேவையானபோது, அது பற்றி ஆலோசித்து முடிவு எடுக்கும்.

*High Schools in Thanjavur district*

* 240 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. The Minister for Education and Industries be pleased to state—

(a) whether it is a fact that all Government High Schools in Thanjavur district had to postpone their terminal examinations for Standards VI to X which should have begun on 11th April 1967; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பள்ளிகளுக்கு வினாத்தாள்கள் அனுப்புவதில் கால தாமதம் ஏற்பட்டதாலும், ஒரத்தநாட்டில் 9—4—1967 அன்று வினாத்தாள்கள் களவு போனதாலும் தேர்வு நடத்த இயலவில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, may I know the valid reasons for the delay in the despatch of these question papers from our Government Press if they have been printed in the Government Press and how the theft has occurred? Who was found responsible for that theft and what action was taken against the culprit?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள கழகப் பள்ளியில் 9—4—1967-ல் தேர்வு நடைபெறுவதாக இருந்தது. ஆனால், வினாத்தாள்கள் காலாகாலத்தில் உரிய இடத்திற்குப் போய்ச் சேரவில்லை. காரணம் காண்ட்ராக்டர்கள் அதை அனுப்பி வைப்பதற்கான முயற்சிகளில் காலதாமதம் ஏற்பட்டது. ரயில்கள் மூலம் அனுப்புவதற்கான முயற்சியில் நெருக்கடிகள் ஏற்பட்டு காலதாமதம் ஏற்பட்டது. 9—4—1967-ல் நடைபெறவிருந்த தேர்வு, 20—4—1967-ல் நடைபெற்றது. அந்தக் காண்ட்ராக்டர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் ஒரத்தநாடு பள்ளியில் வினாத்